**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீரமானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதும் இல்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) திருப்பியனுப்பப் பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 4-40)

**(2) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப் படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975.)**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவரவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975.) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

---

127-133 ஆம் பக்கங்களில் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**1975 அக்டோபர் 24]** [திரு. செ. மாதவன்]

குற்ற பரம்பரை பழங்குடிகள் சட்ட விசாரணைக் குழுவின் பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு வழக்கமான குற்றம் புரிவோர் குறித்த அனைத்திந்திய சட்ட முன்வடிவு மாதிரி ஒன்றை நடுவண் அரசு தயாரித்துள்ளது. வழக்கமாகக் குற்றம் புரிவோர்கள் குறித்த வழக்குகளைக் கையாளுவதில் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான நடைமுறை இருக்கும் வண்ணம் மாநிலச் சட்டமாக மேற்கொள்ளப்பட இந்த மாதிரிச் சட்ட முன்வடிவு கருத்தில் கொள்ளப்படலாம் என நடுவண் அரசு மாநில அரசைக் கேட்டுள்ளது.

வழக்கமாக குற்றம் புரிபவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்தல் குறித்த தமிழ் நாடு 1948 ஆம் ஆண்டுச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 6/1948) இம் மாநிலத்தில் இப்போது செயலில் இருந்து வருகிறது. இது ஒரு அடங்கல் சட்டமாகும். இதில், மாதிரிச் சட்ட முன்வடிவின் முக்கிய விதித் துறைகள் அடங்கியுள்ளன. எனவே, வழக்கமாகக் குற்றம் புரிபவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்தல் குறித்த தமிழ் நாடு 1948 ஆம் ஆண்டுச் சட்டத்தைத் திருத்துவதன் வாயிலாக இம் மாநிலத்திலுள்ள நிலைமைகளுக்குப் பொருத்தமானவையும் மாதிரிச் சட்ட முன்வடிவில் இருப்பவையுமான விதித் துறைகளைச் சேர்த்துக்கொள்வது போதுமானதாகும் என்றும், இதற்காக தமிழ் நாடு சட்டத்திற்குப் பதிலாக புதிதாக வேறு ஒரு சட்டத்தைக் கொண்டு வரத் தேவையில்லை என்றும் அரசு முடிவு செய்துள்ள இச்சூழலில்தான் வழக்கமாகக் குற்றம் புரிபவர்களுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்தல் குறித்த தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு (திருத்த) சட்ட முன்வடிவு பரிசீலனை செய்யப்படுவதற்காகச் சட்ட மன்ற மேலவையில் இப்போது வைக்கப்படுகிறது.

இதனை ஏற்று நிறைவேற்றுமாறு இம் மேலவையை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* **திரு. கே. ராஜாராம்** : மேலவைத் துணைத் தலைவரவர்களே, நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு, தமிழ் நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய அனைத்தும் சேர்ந்திருந்த சென்னை மாகாணத்தில் குற்றப் பரம்பரைச் சட்டம் என்று ஒன்று இருந்தது. அந்தக் குற்றப் பரம்பரைச் சட்டத்தினால்

**அதிகம்** பாதிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து வருபவன் நான். மதுரை, இராம நாதபுரம் ஜில்லாக்களில் பெரும் ஜனத்தொகையைக் கொண்ட ஒரு சமூகம்—கள்ளர் சமூகம்—இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டதொரு சமூகமாக இருந்தது. சுதந்திரம் அடைந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அந்தச் சட்டம் எடுக்கப்பட்டது. அதற்குப் பதிலாக வழக்கமாகக் குற்றம் புரிவோர் சட்டம் என்றதொரு சட்டத்தை அப்போது நிறைவேற்றினார்கள். ஒரு ஜாதியில் பிறந்ததற்காக ஒருவன் குற்றவாளி என்று இருந்ததை மாற்றி, எந்த ஜாதியில் பிறந்தாலும், வழக்கமாகக் குற்றம் செய்பவன் யாராக இருந்தாலும், அதன்கீழ் வருமளவுக்கு அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. மற்ற மாநிலங்களிலும் இப்படிப்பட்ட சட்டம் இருந்தது. ஆனால் ஒரு மாநிலத்திற்கு ஒரு மாநிலம் அந்தச் சட்டத்தில் பலவிதமான மாறுதல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் மாற்றி, தேசம் பூராவும் சட்டம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தில், மத்திய அரசு ஒரு மாடல் சட்ட முன்வடிவை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருந்தது. அதிலுள்ள சில ஷரத்துக்கள் மட்டும் எடுக்கப்பட்டு, இப்போது திருத்தச் சட்ட முன்வடிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அது ஏனென்று சற்று விளக்கமாகச் சொல்லும்படியாக அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அனுப்பியுள்ள மாடல் சட்ட முன்வடிவில் உள்ள எல்லா ஷரத்துக்களையும் ஏன் அப்படியே வைத்துக் கொள்ளக்கூடாது? எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக சட்டம் இருக்கலாமே? அதில் சில ஷரத்துக்களை மாத்திரம் எடுத்து ஏன் சேர்த்துக்கொள்ள வேண்டும்? அப்படியே ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது? இவற்றையெல்லாம் விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் சில ஷரத்துக்களை மாத்திரம் சேர்த்து, திருத்த மசோதாவாகக் கொண்டு வருவதால், ஏதாவது விடுபட்டுப் போயிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** துணைத் தலைவரவர்களே, இந்த மாதிரிச் சட்டம் எப்போது அனுப்பப்பட்டது, ஏன் அனுப்பப்பட்டது என்பதைப் படித்துப் பார்த்தால் மிகவும் வியப்புக்குரியதாக இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாததாக இருக்கிறது. இதை 1954-ல் அனுப்பியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 21 ஆண்டுகள் இது நம்முடைய மாநிலத்தில் பரிசீலனையில் இருந்திருக்கிறது. நான் தெரிந்து கொண்ட வரையில், இந்த மாநிலச் சட்டம் ஒரு முழுமையான சட்டம்—'காம்ரஹென்சிவ் ஆக்ட்'. எனவே, மத்திய அரசினுடைய சட்டத்தை ஏற்க வேண்டாமென்று அன்றைய முதலமைச்சர், திரு. காமராஜ் அவர்கள் முடிவெடுத்ததாகப் படித்துப் பார்த்தேன். அதற்குப் பின்னாலே சட்ட இலாகா

படித்துப் பார்த்து, முக்கியமாகக் கொண்டுவந்துள்ள பிரிவு, 'ஷெட்யூல் ஆஃப் அபென்சஸ்' என்பது. என்னென்ன குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்—'ஹேபிச்சுவல் அபன்டர்ஸ்'—என்று இருப்பதை எடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு இணைக்க வேண்டுமென்று சொன்னதை எடுத்திருக்கிறோம். முக்கியமான ஆலோசனைகள் விடுபட்டிருக்கிறதாவென்று கேட்டேன். இல்லையென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975) நிறைவேற்றப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை.

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.